நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி.எண். 149/2019**

2021ம்ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | | **நாதீராபர்வீன்** | **வயது** | | 32 |
| **க/பெ.** | **:** | **தாகீர்பாஷா** | **தொழில்** | **:** | இல்லதரசி |
| **ஊர்** | **:** | **வாணியம்பாடி** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **:** | **திருப்பத்தூர்** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **:** | **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் வாணியம்பாடியில் வசிக்கிறேன். இல்லதரசியாக உள்ளேன். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஏப்ரல் மாதம் 15ம்தேதி வாணியம்பாடியிலிருந்து பெங்களூர் செல்வதற்காக பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்தேன். என் குழந்தைகள் மற்றும் மாமியார் என்னுடன் வந்தார். நான் ரயிலில் பயணம் செய்துவந்த போது கூட்டமாக இருந்தது. ஜோலார்பேட்டை ரயில் நிலையத்திற்கு இடையே ரயில் சென்ற போது, யாரோ ஒரு பெண்மணி கூட்டத்தில் என்னைபிடித்து தள்ளினார். சிறிது நேரம் கழித்து எனது ஹண்ட்பேக்கை பார்த்தேன். அதில் நான் வைத்திருந்த பர்சை காணவில்லை. அந்த பர்சில் இரண்டு தங்க நெக்லஸ்கள், ஒரு ஜோடி தங்க கம்பல் மற்றும் ரூ.50,000/- பணம் இருந்தது. திருடு போன நகையின் மொத்த எடை 8 சவரன் ஆகும். என்னுடன் பயணம் செய்த மாமியாரிடம் இது குறித்து சொன்னேன். அதன் பிறகு என் கணவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். பிறகு நேராக பெங்களூர் சென்றுவிட்டேன். மறுநாள் ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்தில் திருடு போனது சம்மந்தமாக புகார் அளித்தேன்.என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த புகார் ஆகும். புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். சுமார் ஒரு வருடம் கழித்து காவல் நிலையத்திலிருந்து அழைத்தார்கள். என்னிடம் திருடு போன நகையின் ஒரு பகுதி உருக்கி கட்டியாக்கப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதனை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் கூறினார்கள். நான் நீதிமன்றத்தில் மனு செய்து அந்த தங்க கட்டிகளை பெற்றுச்சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள தங்க கட்டிகளை தான் நான் மனு செய்து பெற்றுச்சென்றேன். புகைப்படம்

அ.த.சா.ஆ.2 ( வரிசை 2 எண்ணிக்கை) ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

வாணியம்பாடியில் அம்மா உள்ளார்கள் என்றால் சரிதான். முன்பதிவு யார் செய்தார்கள் என்றால் முன்பதிவு செய்யவில்லை. ரயில் நிலையத்தில் டிக்கெட் வாங்கினேன்.ரயிலில் ஆஜர் எதிரிகள் (1ம், 3ம் எதிரிகள்) இருந்தார்களா என்றால்இருந்தார்கள். இவர்களுடன் இன்னொருவரும் இருந்தார். ஆஜர் எதிரிகள் எனக்கு பின்னாடி ரயிலில் ஏறினார்கள் என்றால் சரிதான். ரயிலில் கூட்டம் இருந்தது என்றால் சரிதான்.முதலில் யாருக்கு போன் செய்து தகவல் சொன்னேன் என்றால் கணவருக்கு போன் செய்தேன். அவர் சொல்லி தான் பெங்களூர் சென்றேன் என்றால் சரிதான். எந்த தேதியில் ஜோலார்பேட்டையில் புகார் அளித்தோம் என்றால் மறுநாள் புகார் அளித்தோம். எத்தனை மணிக்கு புகார் அளித்தேன் என்றால் காலை 10.00 மணிக்குள்ளாக வந்தோம். நாங்கள் லாக்பாக் ரயிலில் வந்து புகார் கொடுத்தோம். புகாரினை யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் எனது அக்காவின் மகன் புகாரை ஆங்கிலத்தில் எழுதி கொடுத்தார். அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை நாட்கள் போலீசார் விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. போலீசார் பின்பு விசாரித்த போது கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான்.வாணியம்பாடியில் என் தாயார் வீடு எங்குள்ளது என்றால் சென்னாம்பேட் உள்ளது. தாய் தந்தையும் அங்கு உள்ளார்கள். வேலைக்கு செல்லவில்லை. ரயிலில் பயணம் செய்த டிக்கெட்டை போலீசாரிடம் ஒப்படைத்தோம் என்றால் சரிதான். எனது மாமியாருக்கு சொந்த ஊர் ஆம்பூர் புதூர் ஆகும். எனது மாமியார் எந்த ஊரில் ரயில் ஏறினார் என்றால் ஆம்பூரில் ஏறினார். நானும் எனது குழந்தைகளும் வாணியம்பாடியில் ரயில் ஏறினோம் என்றால் சரிதான். நான் பயணம் செய்த அதே கோச்சில் தான் எனது மாமியார் பயணம் செய்தார் என்றால் சரிதான். நான் புகாரில் சொல்லியது போல்தங்க நகைகள் மற்றும் பணத்தை வைத்திருக்கவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் நாங்கள் பயணித்த ரயிலில் பயணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலீசார் போட்ட பொய் வழக்கிற்காக சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி.எண். 149/2019**

2021ம்ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | | **தாகீர்பாஷா** | **வயது** | | **43** |
| **த/பெ.** | **:** | **சீராஜுதீன்** | **தொழில்** | **:** | டிரைவர் |
| **ஊர்** | **:** | **பெங்களூர்** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **:** | **பெங்களூர்** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **:** | **பெங்களூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் பெங்களூரில் வசிக்கிறேன். கேஜி அல்லி என்ற இடத்தில் பேக்கரி கடையில் டிரைவராக வேலை செய்கிறேன். அ.சா.1 என் மனைவி. கடந்த 15.04.2017ம்தேதி என் மனைவி என் அம்மா, எனது இரண்டு குழந்தைகள் அனைவரும் கோடை விடுமுறைக்காக பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் ரயிலில் வாணியம்பாடியிலிருந்து பெங்களூருக்கு சென்றார்கள். காலை 11.30 மணிக்கு ரயில் ஏறினார்கள்.11/2 மணி நேரம் கழித்து 12.00 மணிக்குள் என் மனைவி எனக்கு போன் செய்து, அவர் கைப்பையில் வைத்திருந்த நகை திருடு போய்விட்டதாக சொன்னார். அவர் போன் செய்த சமயம் ரயில் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தை கடந்துவிட்டது. எனவே அவரை பெங்களூருக்கு தொடர்ந்து பயணிக்க சொல்லிவிட்டேன்.தகவல் தெரிந்த உடன் நான் என்னுடைய காரை எடுத்துக்கொண்டு அன்றைய தினமே பெங்களூர் சென்றுவிட்டேன். பெங்களூர் கன்டோன்மெண்ட் ரயில்வே காவல்நிலையத்தில் முதலில் தகவல் சொன்னேன். அவர்கள் விபரங்கள் கேட்டார்கள். திருடு போன இடம் ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்திற்குள் வருவதால் அங்கு சென்று புகார் கொடுக்கும்படி சொன்னார்கள். எனவே மறுநாள் என் மனைவியை அழைத்துக்கொண்டு, ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்திற்கு வந்து என்மனைவி மூலமாக புகார் அளித்தோம். இரண்டு தங்க நெக்லஸ்கள், தங்க மோதிரம் மற்றும் ரூ.50,000/- பணம் திருடு போனது சம்மந்தமாக புகார் அளித்திருந்தோம். சுமார் 1 வருடம் கழித்து போலீசார் அழைத்தார்கள். அவர்களின் அறிவுத்தலின் பேரில் என் மனைவி நீதிமன்றத்தில் மனு செய்து போலீசார் கைப்பற்றி

ஒப்படைத்திருந்த நகையை பெற்றுக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

என்ன படித்துள்ளேன் என்றால் 8ம்வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை யார் எழுதிகொடுத்தார்கள் என்றால் எனது மனைவியின் அக்கா மகன் எழுதிக்கொடுத்தார். பெங்களூர் கன்டோன்மெண்ட் போலீசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் ஆனால் அவர்கள் ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார்கள். என் மனைவியின் அக்கா எங்கு உள்ளார் என்றால் வாணியம்பாடி சென்னாம்பேட்டையில் உள்ளார். எனது மனைவியின் அக்கா மகன் என்ன படிக்கிறார் எங்கு படிக்கிறார் என்றால் சென்னையில் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறார். கன்டோன்மெண்ட் ரயில் நிலையத்திற்கு அழைத்து சென்ற எனது நண்பர் அப்துல்லா இந்த வழக்கில் சாட்சியாக உள்ளாரா என்றால் இல்லை. எனது அம்மா என் மனைவியுடன் ரயில் பயணம் செய்தார் என்றால் ஆம்பூரில் ஏறி எனது மனைவியுடன் பயணம் செய்தார். அவரும் முன்பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ரயிலில் என்ன நடந்தது என்ற விபரம் எனது மனைவி சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். எனது மனைவிக்கு செலவிற்கு பணம் கொடுத்த அனுப்பவில்லை என்றால் ரூ.3,000/- செலவிற்கு கொடுத்தனுப்பினேன்.கன்டோன்மெண்ட் ரயில் நிலையத்தில் எனது மனைவி ரயில் இறங்கும் போது எத்தனை பேக் வைத்திருந்தார் என்றால் 2 பேக் வைத்திருந்தார். எனது குழந்தைகளுக்கு என்ன வயது இருக்கும் என்றால் தற்போது 12, 13 ஆகிறது. மறுநாள் புகாரை எத்தனை மணிக்கு கொடுத்தோம் என்றால் காலை 09.30 மணிக்கு கொடுத்தோம்.என் மனைவி கூறியது போல் பணம்,நகை திருடு போகவில்லை என்றாலும், போலீசார்தாக்கல் செய்த பொய் வழக்கிற்காக போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:-

இல்லை